பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்

விலை: சதம் 60

தரத்தினில் சிறந்த
மான் - முயல் - வரிக்குதிரை
யானை - விளக்கு
சந்திரிக்கா - பூ
புலிமார்க் ஓடுகளையே
பாவியுங்கள்

மு.தா. பொன்னம்பலம்
36, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்
போன்: 7493

# ஈழநாடு
THE EELANADU

மலர் 23 ஆனி 27 றம்ழான் 8 இதழ் 147
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 11-7-1981

ஸ்ரீ பராசக்தி
சோதிட நிலையம்

திருமணம், கல்வி, உத்தியோகம், வெளிநாடு செல்லுதல், கல்யாணப்பொருத்தம் முதலின.
குறிப்புடன் ரூ. 10 அனுப்புக.
எண்கணிதமும் பார்க்கப்படும்.
காலை 9-30 முதல் பிற்பகல் 4-30 வரை நேரில் சந்திக்கலாம்.

KL. M. Krishnapillaiy
Sri Parasakthi Sothida Nilayam
68, J, கன்னுதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.
0257

★ எதிர்க்கட்சித் தலைவர் அமிர்தலிங்கம் மீதான

# நம்பிக்கையில்லாப் பிரேரணை:

# கூட்டணி கலந்துகொள்ளாது!

(கொழும்பு)

**எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கத்திற்கு எதிராகக் கொண்டுவரப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை விவாதத்தில், தமிழர் விடுதலைக் கூட்டணிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்துகொள்ளமாட்டார்கள்.**

கொழும்பில் நேற்றுக்கூடிய தமிழர் விடுதலைக் கூட்டணி பாராளுமன்றக் குழுக்கூட்டத்தில் மேற்கண்ட முடிவுஎடுக்கப்பட்டது.

எதிர்க்கட்சித்தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம்மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணை விவாதத்திற்கு வருமுன்பு தனிப்பட்ட விளக்கம் அளிக்கஅனுமதிக்கவேண்டுமென சபாநாயகரிடம் கோருமென்றும், சபாநாயகர் அனுமதியளிக்கும்

[6-ம்பக்கம் பார்க்க]

## தவறான 'பாஸ்போட்': இளைஞர்கள் மீது நடவடிக்கை

[கொழும்பு]

தவறான பாஸ்போட்டுக்களுடன் ஜெர்மனி செல்லமுயன்று கட்டுநாயக்கா விமானநிலையத்தில் தடுத்து வைக்கப்பட்ட இளைஞர்களுக்கு எதிராக குடியகல்வு சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படுமென்று பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

வெளிநாடு சென்று பணம் சம்பாதிக்கும் நோக்கம் கொண்ட இளைஞர் பலர் பிரயாண முகவர் நிலையங்களினால் ஏமாற்றப்பட்டுள்ளனரென்றே தெரிகிறது. எனினும் அந்த இளைஞர்கள் ஏமாற்றப்பட்டதற்கு போதிய சான்றுகள் இல்லாத காரணத்தினால் முகவர் நிலையங்கள் மீது வழக்குத் தொடரமுடியாத நிலை இருப்பதாகவும் தவறான பாஸ்போட்டுகளை வைத்திருந்த அப்பாவி இளைஞர்களே சட்டத்தின் பிடியில் அகப்பட்டுள்ளனரென்றும் பொலிஸ் வட்டாரங்களில்தெரிவிக்கப்பட்டது. [இ]

ரூ. 20,000 தங்கச்சங்கிலி வழிப்பறி:

## யாழ். நகைக் கடையில் ஒரு பகுதி நகை மீட்பு?

[யாழ்ப்பாணம்]

சுன்னாகம் பொலிஸ் பகுதியிலுள்ள ஈவினையில் கொள்ளையடிக்கப்பட்ட 10பவுண் தங்கச்சங்கிலியின் மேலும் ஒரு பகுதி யாழ்ப்பாணத்திலுள்ள நகைக் கடையொன்றிலிருந்து மீட்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட நகை உருக்கப்பட்டு மீண்டும் அதே பவுணில் சங்கிலி செய்யப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டு சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி இன்ஸ்பெக்டர் பொன். சுகுனேந்திரனால்

[6ம் பக்கம் பார்க்க]

பட்டிருப்பு - அம்பாறை எல்லையில்

# கடைகள், வீடுகள் தீக்கிரை!

## 6 பேர் ஆஸ்பத்திரியில் அனுமதி

### ரோந்து நடவடிக்கையில் பொலிஸார் - இராணுவம்

[மண்முனை]

பட்டிருப்பு-அம்பாறை எல்லைப்புறக் கிராமங்களில் இடம்பெற்ற மோதலை அடுத்து அம்பாறை நகரில் பத்துக்கடைகள் தீக்கிரையாக்கப்பட்டன.

என்றும் வெல்லாவெளி கிராமத்தில் 30க்கும் அதிகமான வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டு, 16 வீடுகள் கொள்ளையடிக்கப்பட்டதாகவும் எமது நிருபர் அறிவிக்கின்றார்.

வெல்லாவெளி எல்லைப்புறக் கிராமத்தில் இடம்பெற்ற கோஷ்டிமோதலில் பாதிக்கப்பட்ட 6பேர் ஆபத்தான நிலையில் மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சேனநாயக சமுத்திரத்திலிருந்து பட்டிருப்புத்தொகுதியைச்சேர்ந்த தமிழ்க் கிராம விவசாயிகளின் வயல்களுக்கு நீர்ப்பாய்ச்சுவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கை தொடர்பாக இருசாராரிடையே மோதல் ஏற்பட்டதாகத்தெரிவிக்கப்பட்டது.

அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களிலுள்ள எல்லைக் கிராமங்களில் பதட்ட நிலை நிலவுகிறது.

பொலிசார் இருபக்க எல்லைகளிலும் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். அத்

[6-ம் பக்கம் பார்க்க]

## பத்திரிகையாளருக்கு சம்பளத் திட்டம்

### தொழில் அமைச்சு விசாரணை

[யாழ்ப்பாணம்]

பத்திரிகையாளர்களுக்கு சம்பளத் திட்டமொன்றை தொழில் அமைச்சு வகுக்கவேண்டுமென்று இலங்கை பத்திரிகை எழுத்தாளர் இயக்கம் பிரதமர் திரு. ஆர். பிரேமதாசாவை கோரியதைத் தொடர்ந்து இவ்வியக்கத்தினரை விசாரணையொன்றுக்கு தொழில் அமைச்சு அழைத்துள்ளது.

இவ்விசாரணை இம் மாதம் 21ம் திகதி யாழ்ப்பாணம் தொழில் காரியாலயத்தில் நடைபெறும். விசாரணையின் போது யாழ். மாவட்டத்திலுள்ள பத்திரிகையாளர்களது விபரங்கள் மற்றும் சம்பந்தப்பட்ட தஸ்தாவேஜுகளை சமர்ப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

கடந்த ஜனவரிமாதம் பிரதமர் திரு. ஆர். பிரேமதாசா யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த போது அவரிடம் இவ்வியக்கத்தினர் ஐந்து அம்சத் திட்டமொன்றைச்சமர்ப்பித்து நிவாரணம் வழங்குமாறு கோரியிருந்தனர்.

அத்திட்டத்தில் ஓர் கோரிக்கையாக பத்திரிகையாளர்களுக்கு தொழில் அமைச்சு சம்பள திட்டமொன்றை வகுக்குமாறு கோரியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. [செ]

நிலையான வைப்பிற்கு
பிரமிக்கும் வட்டி விகிதங்கள்;
மகாரராஜா
இன்வெஸ்மென்ட்,
25% வட்டியை
வழங்குகின்றது

குறைந்த வைப்பு ரூ. 500 -

மீண்டும் எமது போட்டோஸ்ரட் பிரதி சேவை ஆரம்பமாகியுள்ளது

122, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 8267
தலைமையகம்: 54, பாங்சால் வீதி,
கொழும்பு - 11.

'வரதர் வெளியீடு' அளிக்கும் 'நீலவண்ணன்' எழுதிய
யாழ்ப்பாணம் எரிகிறது!
முழுவிபரங்களும் நிறையபடங்களுடன் ரூபா 8/-
[0284] எல்லா புத்தக விற்பனையாளரிடம் கிடைக்கும்

சிங்கப்பூரில் வேலை வாய்ப்பு
விபரம் பின்பக்கம்
விளம்பரஇல: 0274 ஐ பார்க்கவும்
0275

### மணிவாக்கு

அஞ்ஞானமலிருப்பதைவிடப் பிறக்காமலிருப்பதே நல்லது. ஏனெனில் அறியாமைதான் துர்ப்பாக்கியத்தின் மூலவேர். — பிளேட்டோ

# நமது நோக்கு

## ஏழை அழுத கண்ணீர்!

அகதிகள் என்ற பேரில் நூற்றுக்கணக்கானோர் வெளிநாடுகளிலிருந்து மேற்கு ஜெர்மனிக்குள் பெருக்கெடுப்பதாக பொன் அரசாங்கத்துக்கு முறைப்பாடு கிடைத்துள்ளது.

இச்செய்தியை இலங்கை வானொலி மிகப் பிரபலப்படுத்துவதில் ஆசைகொண்டிருப்பதாகத் தெரிகின்றது.

இலங்கையிலிருந்து-குறிப்பாக யாழ்ப்பாணத்திலிருந்து பல வாலிபர்கள்மேற்கு ஜெர்மனிக்கும் படையெடுத்ததும் அங்குள்ளதொழில் வசதிகள் அவர்களைப் பெரிதும் கவர்ந்ததும், உழைக்கும் சக்தியைக்கொண்டு பொருளீட்டியதும் கடந்த காலத்தின் அனுபவமாகும்.

பெருந்தொகை வாலிபர் மேற்கு ஜெர்மனிக்கு தொடர்ந்து செல்வது பின்பு நிறுத்தப்பட்டது பிறந்த மண்ணில் வேலைவாய்ப்புக் கிட்டாதகாரணத்தால், தொழில்தேற்ற கல்வி, உயர் கல்வி வசதிகள் மறுக்கப்பட்டதால், இவர்கள் கதியற்றவர்களென்ற அடிப்படையில் 'அகதிகள்' என்ற காரணங்காட்டி அங்குசென்றிருக்கலாம்,

'அகதிகள்' என்ற சொல் அர்த்தமைந்த வரைவிலக்கணம் இவர்களுக்குப்பொருந்தாதென்று அநுதாபமற்ற சக்திகள் இந்த வாய்ப்புக்கு முற்றுப்புள்ளியிட்டதாக நம்பப்பட்டது.

இரண்டாவது தடவை அகதிகள் படையெடுப்பு மேற்கு ஜெர்மனியையே தாக்குகின்றது. இவற்றுள் பலர் யாழ்ப்பாண வாலிபர் என்பதை நாமறிவோம்.

வட்டிக் கடைகளிலும், கடன் உதவும் ஸ்தாபனங்களிலும் பெற்றோர் பலர் காலெடுக்க நிற்பதும், பாஸ்போர்ட் விண்ணப்பங்கள் கொழும்புக் காரியாலயத்தில் குவிந்திருப்பதுவும் யாழ்ப்பாண வாலிபர்களைப் பொறுத்தளவில் இன்றைய சர்வசாதாரண காட்சிகளாகும்.

மக்களுக்கோ, அரசாங்கத்துக்கோ இதன் காரணம் தெரியாததொன்றல்ல. இன்று இங்கு நடந்தேறிய 'யாழ்ப்பாண துன்பியல் நாடகம்' நூற்றுக்கணக்கானோரை அகதிகளாக்கிவிட்டது. வியாபாரத்தை நம்பிவாழ்ந்த பெற்றோர், உயர்கல்விக்கு யாழ்ப்பாண நூல்நிலையத்தைப் பக்கபலக் கழகமாக உபயோகித்த மாணவர், உயிரிழந்த அப்பாவிகளைக்கண்டு அஞ்சிய இளைஞர், யாழ்ப்பாண எம்பியின் வாசஸ்தானத்துக்கு ஏற்பட்ட கதியைக் கண்ட மக்கள் அனைவரும் அகதிகளே.

சொந்த மண்ணில் தாமதிப்பதில் வேலையில்லை 'திரைகடலோடியும் திரவியம் தேடு'' என்ற மூதாட்டியின் வசனத்தில் மீண்டும் நம்பிக்கைகொண்டு பலர் வேலைவாய்ப்புள்ள ஜெர்மனிக்குப் பறந்துபோவது மறைக்கத்தேவையற்ற உண்மை

இத்தொகை மட்டுக்கடங்காமல் அதிகரித்ததால், உண்மையான அகதிகள் யார் என்ற விசாரணை அவசியமாகும். இந்தச் சலுகையை துர்ப்பிரயோகஞ் செய்யும் பேர்கள் எங்கும் இல்லாமலில்லை. ஆனால் நிச்சயமாக யாழ்ப்பாண வாலிபர்களாயிருந்தால் அவர்கள் அகதிகள் என்பதை இலங்கை அரசு ஒப்புக்கொள்ள வேண்டும். தடையின்றி உதவவும்வேண்டும்.

யாழ்ப்பாணத்தை அழித்துவிடும் திட்டம் என்று இங்குள்ள பொதுமக்கள் கடந்தகால வன்செயல்களைக்கண்டு அஞ்சும்போது, அரசு அசமந்தப்போக்கில் விசாரணைக்குழு பற்றி தீர்மானம் எடுக்கிறது.

வதந்திகள் நிறைந்த காலம் இது. பொதுமக்கள் வதந்திகள்; அரசாங்கம் சார்பான வதந்திகள்; ஆக்கிரமித்தோரின் வதந்திகள்; ஆக்கிரமிக்கப்பட்டோரின் வதந்திகள் இவையெல்லாம் பறக்கும் சக்தி பெற்றவை ஒரேஒரு வேறுபாடு: அரசாங்கசார்பான வதந்திகள் வானொலியிலும், அரசாங்கசார்பான பத்திரிகைகளிலும், அரசாங்கபிரமுகர்களின் பேட்டிகளிலும், பேச்சுகளிலும் இடம்பெறுவதால் அவை கூடிய கடுகதி பெற்றவை.

எது என்னவானாலும், கண்ணைக் கெடுத்தவன் கோலைக் கொடுப்பவன் என்ற நம்பிக்கையில், உண்மையில் பாதிக்கப்பட்ட 'ஏழைகள் விடும் கண்ணீர்' வீண்போகாமல், இந்த அகதிகளுக்கு வாழ்வளிக்க அரசாங்கம் முன்வர வேண்டும்.

## மீன் தட்டுப்பாடு

"எங்கு பார்த்தாலும் தண்ணீர், ஆனால் விடாய் தீர்க்க ஒரு சொட்டும் கிடைக்கவில்லையே!' என்று ஒருபிரபல ஆங்கிலப் புலவன் பாடினான்.

நாலுபக்கமும் கடல் நடுவிலிருக்கும் எங்களுக்குத் தேவைக்கேற்ற மீன்கிட்டவில்லையே என்று நெடுங்காலமாக ஓலமிடுகிறார்கள் இந்நாட்டுமக்கள்.

மீன்பிடி இலாகாவிலுள்ள பல ஊழல்களைக் களைந்துவிட்டார். மீன்பிடி அமைச்சர் பெஸ்டஸ் பெரேரா என்று நாம் பாராட்டிய நினைவு உண்டு. எனவே வேறென்ன வியாதிகள் இன்னும் உண்டு என்பது தெளிவாகவில்லை.

சைவஉணவின் மேன்மையை மேனாட்டாரே மருத்துவ விஞ்ஞான ரீதியில் உணரத்தொடங்கிவிட்டனர். இருந்தும் இந்நாட்டின் ஏழைகளுக்கும் ஏன் மத்தியதர, பணக்காரவர்க்கத்தினருக்கும் போஷாக்களிக்க பொருத்தமானது மீன் உணவென்பது புள்ளிகள் கூறும் உண்மை.

மீன்பிடி குன்றியிருப்பதை புள்ளிவிபரங்கள் விளக்குகின்றன. நாட்டுக்குத் தேவையான மீன் நிறை 300, 000 தொன். சென்றவருட மீன்பிடி மொத்தம் 158,000 தொன் மீன்விலை விஷம் போல ஏறிவிட்டது வியப்பல்ல. நடுத்தரமக்கள், ஏழைமக்கள் கனவிலும் காணமுடியாத உணவுவகை மீனேயாகும்.

போஷாக்குகுறைந்த மங்கல் கண்களுடன் காணப்படும் இரத்தம் குன்றிய குழந்தைகள் நாட்டின் எதிர்காலத்துக்கு ஒரு எச்சரிக்கையாகும்.

காரணங்கள் பலவாறு ஆம் மீனவருக்கும் பாவனையாளருக்கும் இடையே நடமாடும் தரகர், இருவர்க்கத்தினருக்கும் தீங்கு விளைவிக்கின்றனர். முதலில்லா வியாபாரம் செய்யும் இத்த் தேசவிரோதிகளை இனங்கண்டு தடுக்க தண்டிக்க இறுக்கமான நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும்

இது எளிதல்ல ஆயினும் மீன்பிடி கூட்டுத்தாபனத்தின் முக்கியபணி, முதற்பணி.

### யாழ். பொதுசன நூலகம்

# புனரமைப்புச் செய்வது எமது பொறுப்பாகும்

## யாழ். மாநகர முதல்வர்

### நூல்கள் அன்பளித்த 'இன்ரறிக்' கழகத்துக்கும் பாராட்டு

(அரியாலை)

தீயினால் 1660ம் ஆண்டு முற்றாக அழிக்கப்பட்ட லண்டன் மாநகரம் இன்று உலகிலுள்ள தலைசிறந்த நகரங்களுள் ஒன்றாகக் கட்டி எழுப்பப்பட்டுள்ளது. அதைப்போல தீவைத்து நாசமாக்கப்பட்ட யாழ்ப்பாண பொதுசன நூல்நிலையத்தை முன்பு இருந்த நிலைமைக்கு ஆக்கும் பொறுப்பு எம்முடையதாகும். இந்தநிலையத்துக்குப் பெருந்தொகையான நூல்களைச் சேகரித்து வழங்கிய யாழ். பரி. யோவான் கல்லூரியின் 'இன்ரறக்' கழகத்தினர் பாராட்டுக்குரியவராவர்.

இவ்வாறு யாழ்ப்பாண மாநகர முதல்வர் திரு. இராசா விசுவநாதன் யாழ்ப்பாணம் பரி யோவான்கல்லூரி பீற்றோ ஞாபகார்த்த மண்டபத்தில் கல்லூரியின் "இன்ரறக்' கழகத்தினரின் நூல்கள் அன்பளிப்பு வைபவத்தில் கலந்துகொண்டு பேசுகையில் குறிப்பிட்டார்.

கல்லூரி அதிபர் திரு செ. ஈ. ஆனந்தராஜன் தலைமையில் நடைபெற்ற மேற்படி வைபவத்தில் மாநகர முதல்வர் திரு இராசா விசுவநாதன் தொடர்ந்துபேசுகையில், "இந்த நாட்டில் வாழும் தமிழ் மக்களின் உயிருக்கும் உடலுக்கும் நாளுக்குநாள் ஆபத்து ஏற்பட்டு வருகிறது. வரலாறும், சிறப்பும், பண்பாடும் கொண்டு விளங்கிய நூல்களைக்கொண்ட நூல்நிலையம் மிலேச்சத்தனமான முறையில் தீயிட்டு எரிக்கப்பட்ட சம்பவம் எமக்குக் கறைபடிந்த சம்பவமாக அமைகிறது. தமிழ்மக்களுக்கு உரித்தான கல்வியையும், பொருளாதாரத்தையும் தீயிட்டு அழிப்பதன்மூலம் எமது இனத்தை அழித்துவிடமுடியாது" என்றார்.

கல்லூரி அதிபர் திரு. செ. ஈ. ஆனந்தராஜன் தமது தலைமையுரையில் யாழ் றோட்டரிக்கழகத்தின் ஆதரவுடன் அமைக்கப்பட்ட இன்ரறக் கழகம் இன்றுவரை கல்லூரிக்கும் சமுதாயத்திற்கும், பல ஸ்தாபனங்களுக்கும் சிறந்த சேவைகளை ஆற்றிவந்துள்ளது, இச்சேவை மனப்பான்மை என்றும் போற்றத்தக்கதாகும் என்று குறிப்பிட்டார்,

இன்ரறக் கழகத் தலைவர் செல்வன் ரவிராஜ் நூல்களின் ஒரு பகுதியை மாநகர முதல்வரிடம் கையளித்தார்.

யாழ்ப்பாண றோட்டரிக் கழகத் தலைவர் பேராசிரியர் லூதர் ஜெயசிங்கம் பேசுகையில்: "யாழ்ப்பாண பொதுசன நூல்நிலையத்தை மறுபடியும் முன்பிருந்த நிலைமைக்குக் கொண்டுவருவது எமது பாரிய கடமையாகும். இதன் வளர்ச்சிக்கு உதவமுன்வந்த இன்ரறக் கழக அங்கத்தவர்களின் சேவை மனப்பான்மை மதிப்புக்குரியதாகும் என்று குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணம் சென் பற்றிக்ஸ் கல்லூரி அதிபர் அருட்திரு பிரான்சிஸ் யோசேப்அடிகளார் பேசுகையில், மாணவர்கள் ஆக்கும் முயற்சியில் ஈடுபடவேண்டுமே ஒழிய அழிக்கும் முயற்சியில் ஈடுபடக்கூடாது. அழிக்கும் முயற்சி நாட்டுக்கும் நமக்கும் தீமையையே தரும் என்றார்.

றோட்டரிக்கழக முன்னாள் தலைவர் சட்டத்தரணி பாலசுப்பிரமணியம் பேசுகையில், யாழ்ப்பாண பொதுசன நூல்நிலையத்தை முன்பிருந்த நிலைக்குக் கொண்டுவர றோட்டரிக் கழகம் கைகொடுத்து உதவவேண்டுமென்று முடிவுசெய்திருப்பதாகவும், றோட்டரிக்கழக ஆளுநர் திரு. ஏ. சண்முகம் சர்வதேச றோட்டரிக்கழகங்களோடு தொடர்புகொண்டு பெரும் தொகையான நூல்களைச் சேகரித்து வழங்க சம்மதம் தெரிவித்திருப்பதாகவும் தெரிவித்தார்

இன்ரறக்கழக உபபோஷகர் திரு. என். மயில்வாகனம், முன்னாள் கல்விப் பணிப்பாளரும், பொதுசன நூல்நிலைய அங்கத்தவருமான திருமதி ஆர். ஆர். நவரத்தினம் உட்பட பல பிரமுகர்கள் கலந்துகொண்டு உரையாற்றினர்

கழகச் செயலாளர் செல்வன் விக்னராசா நன்றிகூறினார்.

(மா)

## மக்கள் கருத்து

### ஏன் இந்த மௌனம்?

நாமுண்டு நம் குடும்பமுண்டு சொத்துண்டு சுதந்திரமுண்டு; இராமன் ஆண்டாலென்ன, இராவணன் ஆண்டாலென்ன என்ற ஒரு மனப்பான்மை ஒரு காலத்தில் நம்மில் சிலர் மத்தியிலிருந்தது இச்சிந்தனை தற்போது ஏற்பட்ட கட்டுக்கடங்காத காடைத்தனத்தால் புத்துணர்ச்சிக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது தம் வீட்டிலும் தம் மண்ணிலும் வாழ்வது பாதுகாப்பானது என்ற எண்ணம் மழுங்கடிக்கப்பட்டுள்ளது. தம் பாதுகாப்பைத் தாமே ஏற்படுத்தவேண்டும் என்ற எண்ணத்திற்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்கள். எல்லைக்குள் வந்த வெள்ளம் நகருக்குள் வந்து நாட்டுக்குள்ளும் வீட்டுக்குள்ளும் கழுத்தைத் தாண்டி, வாய்க்குள் போகும் அளவிற்கு வந்திருப்பதை உணர்கிறார்கள்.

இவ்வளவு கஷ்டங்களும் நஷ்டங்களும் ஏற்பட்ட பின்பும் ஆட்சியாளரும், பெரிய பௌத்த பீடங்களும் துக்கம் தெரிவிக்காதது கவலைக்குரியது. பஞ்சசீலத்தை வாழ்க்கையின் வழிகாட்டியாக அமைத்த புத்தர் ஒரு இந்துவாகவே இருந்தார். கத்தோலிக்க மதத்தில் இருந்த பிழைகளை மாட்டின் லூதர் எப்படி எடுத்துக்காட்டி புரட்டஸ்தாந்து மதம் ஏற்படுத்தப்பட்டதோ அதே போன்று இந்து சமயத்தில் இருந்து ஏற்பட்டதே புத்த சமயம். புடம்போட்ட கொள்கையை, கோட்பாட்டையுடைய தார்மீக தம்மிஷ்ட பஞ்சசீலக் கொள்கைவாதிகள் இன்னமும் எமக்கு நடந்த அநியாயங்கள்பற்றித் துக்கம்

[2-ம் பக்கம் பார்க்க]

# சிறப்பெனும் செம்பொருள் கண்ட பொன்னம்பலவன்

யாழ் மக்கள் தமது மண்ணிலே நடமாடக்கூட அஞ்சிய சூழ்நிலையிலே-தங்கள் பிரதிநிதியின் இல்லமே தீயாரால் தீயிட பட்ட துயர இல் மக்கள் துடித்துக்கொண்டிருக்கையிலே இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன ஆனி 4ம் திகதிய மரண அறிவித்தலில் 'தம்பிப்பிள்ளை பொன்னம்பலம் என்பவர், யோகேஸ்வரனின் மாமனார் காலமானார்' என்ற அறிவித்தல் ஒலிபரப்பாகியது. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் வெறும் யோகேஸ்வரன் என்றுமட்டுமே ஒலிபரப்பியபோதிலும் கூட அது தங்கள் பிரதிநிதியின் மாமன் என்ற செய்தி மக்களிடை காட்டுத்தீபோல் பரவியது ஆயினும் மக்கள் சுதந்திரமாக ஒன்றுகூடித் தங்கள் பிரதிநிதியுடன் துயரத்தைப் பகிர்ந்துகொள்ள முடியாத சூழ்நிலை தடுத்தது எல்லோருமே தமது இல்லத்திலிருந்தவாறே இதயாஞ்சலி செலுத்தினர். கூடவே யாழகத்தில் மக்கள் குரலாகிய "ஈழநாடு" பத்திரிகையின் குரல்வளையையும் தீக்கரங்கள் நசுக்கி செவிடுருந்தமையினால் எழுந்தளவிலும் அப்பெரியார் பற்றிய செய்தி வெளிவர முடியாதுபோயிற்று.

பொய்யாய்ப் பழங்கதையாய் கனவாய் மெல்லப் போவதுதான் வாழ்வு இந்தப் பொது நியதிக்கு யாருமே தப்பமுடியாது அவ்வாறுயின்

2ம் பக்கம் பார்க்க)

## ரமழான் சிந்தனை

நாயகம் (ஸல்) அவர்கள் கூறுகின்றார்கள், ரமழான் மாதம் வந்துவிட்டால் வானத்தின் வாசல்கள் திறக்கப்பட்டு விடுகின்றன. நரகத்தின் வாசல்கள் மூடப்படுகின்றன. சைத்தான்கள் சங்கிலிகளால் கட்டப்படுகின்றார்கள்.

(ஆதாரம்—மிஷ்காத்)

ஸஹர் முடிவு : 4-27 நோன்பு திறக்கும் நேரம் : 6-32

—தொகுப்பு : மௌலவியா கரீம்

## இலங்கைப் பாராளுமன்றத்திலிருந்து

# அமிரை வெளியேற்ற முயற்சிப்பது ஜனநாயக விரோத செயலாகும்

### தமிழக இளைஞர் காங்கிரஸ் தீர்மானம்

சென்னை, ஜூலை 10

இலங்கை எதிர்க்கட்சித் தலைவரும், தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர் நாயகமுமான திரு அ. அமிர்தலிங்கத்திற்கு எதிராக இலங்கை பாராளுமன்றத்தில் நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றைக் கொண்டுவந்து அவரைப் பாராளுமன்றத்திலிருந்து வெளியேற்ற முயற்சிப்பது ஜனநாயகத்திற்கு விரோதமான செயலாகும்.'

மேற்கண்டவாறு தமிழ்நாடு இந்திரா இளைஞர் காங்கிரஸ் கூட்டத்தில் தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டுள்ளது.

'எரிசாராயப் புகார் குறித்து விசாரிக்க தமிழ்நாடு அரசினால் நியமிக்கப்பட்ட சதாசிவம் விசாரணைக் கமிஷனை கலைக்கக் கோரி இம்மாதம் 20-ம் திகதி தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் கூட்டங்களை நடத்துவது என்றும் இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.'

'இம்மாதம் 5-ம் திகதி முதலமைச்சர் எம். ஜி. ராமச்சந்திரனிடம் எரிசாராய விசாரணைக் கமிஷன் குறித்து மனு ஒன்றைச் சமர்ப்பிக்கச் சென்ற இந்திரா காங்கிரஸ் இளைஞர்களை பொலிசார் தடுத்து நிறுத்திய மை குறித்தும் இக்கூட்டத்தில் கண்டனம் தெரிவிக்கப்பட்டது. (வெ)

### டிங்கு காய்ச்சல்: 58 பேர் பலி!

ஹவானா, ஜூலை, 10

கியூபாவில் டிங்கு காய்ச்சலினால் 58 பேர் பலியாகினர் என்றும் 6 ஆயிரம் பேர்வரை பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் அறிவிக்கப்பட்டது. (இ)

### இன்றைய பலன்

ஆனி மாதம் 27 ம் திகதி

சனிக்கிழமை

(11-7-81)

மேடம்: பொன்னுன சந்தர்ப்பமொன்று உங்களைப் பூரிப்படையச் செய்யும். நடித்தடிய உறவு உங்களை நாடி யேவரலாம். இளம் பருவத்தினருக்கு இன்று இன்பப் பூங்கா பறந்து வரும். கடிதம் உங்களைப் பரவசப்படுத்தும்.

இடபம்: தொல்லைகள் தலை தூக்கும். தொழில் புரியும் இடத்தில் ஏமாற்றத்துக்கு இடமுண்டு. வழக்கு விவகாரத்தில் காலை வாரிவிடலாம். அவசர முடிவைத் தவிர்க்கவும், அடக்கம் வேண்டும்.

மிதுனம்: தன்மான மிருக்கும் தன வரவுக்கும் இடமுண்டு. சிறுக்கு வானைசுகமும் கிடைக்கும். குடும்பத்தில் தென்றல் வீசும். உறவினர்கள் படையெடுத்து வருவார்கள். கல்வியில் முன்னேற்றமுண்டு.

கடகம்: இதயத்தில் ஏக்கம் இன்று தணியும். தேடிய பொருள் காலடியில் கிடைக்கும். நண்பர் ஒருவருக்கு கை கொடுத்து உதவுவீர்கள். செல்வாக்குப் பெருகும்.

சிங்கம்: புதிய கோணத்திலிருந்து பொருள் வரவுக்கும் இடமுண்டு. துணிவையே துணையெனக்கொண்டு எக்காரியத்தையும் சாதிப்பீர்கள். பொதுசனத் தலைமையுடன் புகழும் சேரும்.

கன்னி: கடலிபட்டார் நெஞ்சம்போல் கலங்கி நிற்பீர்கள். விடயங்கள் அனைத்தும் முடுபனியாகவே இருக்கும். சிக்கல் நிறைந்த தினமாகும்.

துலாம்: பிள்ளைகளின் தொல்லைகள் கவலையைத் தரலாம். பிறருடன் பகைத்துக் கொள்ளவும் நேரிடும். குடும்பத்திலும் சிறிய புயல் வீசலாம். வெளியிடத் தொடர்புகளில் அமைதி வேண்டும்.

விருச்சிகம்: வாழ்க்கைமலர் தூவிய மஞ்சமாகக் காட்சியளிக்கும். இளைபத்தில் ஏலைக்கை இழுத்துச் செல்லப்

[ 2ம் பக்கம் பார்க்க]

### 3 மாடிக் கட்டிட இடிபாடுக்குள் 400 பேர்

புதுடில்லி ஜூலை, 10

குஜராத்திலுள்ள தொழிற்சாலை ஒன்றின் 3 மாடிக் கட்டிடம் இடிந்து வீழ்ந்ததினால் 6 பேர் ஸ்தலத்தில் பலியாகினர் என்றும் 400 தொழிலாளர்கள் இடிபாடுகளுக்குள் அகப்பட்டுள்ளனர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

போர்க்கால அடிப்படையில் மீட்பு வேலைகள் நடைபெறுகின்றன. (இ)

### மாண்டவர் தொகை 311ஆக அதிகரிப்பு!

பெங்களூர். ஜூலை, 10

கர்நாடக மாநிலத்திலுள்ள பெங்களூர், மைசூர் ஆகிய நகரங்களில் கள்ளச் சாராயம் அருந்தி பலியானவர்கள் தொகை 311 ஆக அதிகரித்துள்ளது.

கள்ளச்சாராயம் அருந்தியதனுல் பெங்களூரிலும், மைசூரிலும் மூன்றுவது நாளாக நேற்று பலியானவர்களின் தொகை 76 ஆகும்.

கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்களைக் கண்டுபிடிப்பதற்காகக் கலால்பகுதியினர் நேற்று பெங்களூர் முழுவதும் சோதனையிட்டனர்.

இச்சோதனையின் போது பெங்களூரிலுள்ள ஒரு வீட்டிலிருந்து கள்ளச் சாராயம் காய்ச்சப் பயன்படுத்தப்பட்ட இரசாயனப் பொருள் அடங்கிய பதினெரு பீப்பாக்கள் கலால்பகுதியினரால் கைப்பற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (வெ)

### 'பிரிட்டனின் மிகப்பெரிய நாசக்காரி தட்சர்'

#### பாராளுமன்றத்தில் குற்றச்சாட்டு

லண்டன், ஜூலை. 10

பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் உரையாற்றிய எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவர் பிரதமர் திருமதி மார்க்கிரட் தட்சரைப் பார்த்து 'நீர்தான் இந்த நாட்டின் மிகப்பெரிய நாசகாரி' என்று குற்றம்சாட்டினர்.

பிரிட்டனில் இடம்பெற்று வரும் இனக்கலவரங்கள் குறித்து பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் நடைபெற்ற விவாதத்தின் பேசுகையிலேயே எதிர்க்கட்சி எம். பி. ஒருவர் மேற்கண்டவாறு கூறினர்.

பிரிட்டிஷ் அரசின் பொருளாதாரக் கொள்கைகளும் வேலையில்லாத் திண்டாட்டமுமே பிரிட்டிஷ் கலவரத்துக்குக் காரணம் என்றும் பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சிகள் குற்றம்சாட்டின.

#### பேராசையே கலவரத்துக்குக் காரணம்

இதேவேளையில், பிரிட்டிஷ் இளைஞர்களின் பேராசையே பிரிட்டன் இனக்கலவரங்களுக்குக் காரணம் என்றும் வேலையில்லாத் திண்டாட்டமோ அன்றி வீட்டுவசதி இன்மையோ இக்கலவரத்துக்குக் காரணம் அல்ல என்றும் பிரதமர் தட்சர் தெரிவித்துள்ளார். [இ]

#### பிரிட்டிஷ் கலவரத்தில்

### பிள்ளைகள் ஈடுபட்டால் பெற்றேருக்குத் தண்டனை?

லண்டன், ஜூலை. 10

பிரிட்டனில் 17 வயதுக்கு உட்பட்ட பிரிட்டிஷ் இளைஞர்கள் கலவரங்களில் ஈடுபட்டால் அவர்களின் பெற்றேருக்குத் தண்டனை விதிக்கப்பட இருக்கிறது.

இது குறித்து தற்போது ஆலோசிக்கப்பட்டு வருவதாக பிரிட்டிஷ் பிரதமர் திருமதி மார்க்கிரட் தட்சர் பாராளுமன்றத்தில் கூறினர்.

பிரிட்டனில் இடம்பெற்று வரும் கலவரங்களைக் கட்டுப்படுத்த புதிய சட்டங்கள் இயற்றவேண்டியதன் அவசியம் பற்றியும் கலவரங்களைக் கட்டுப்படுத்த பொலிசாருக்கு மேலதிக ஆயுதங்களை வழங்குவது பற்றியும் தற்போது ஆலோசிக்கப்பட்டு வருவதாகவும் திருமதி தட்சர் கூறினர். (இ)

### பிரிட்டிஷ் கலவரம் மன்செஸ்டர்வரை பரவியது

#### ரி. வி. குழுவினர் வாகனங்கள் சேதம்

லண்டன், ஜூலை, 10

மேற்கு பிரிட்டனில் சவுத்தோலில் ஆரம்பித்து லிவர்பூல வரை பரவிய இனக் கலவரங்கள் நேற்றிரவு மன்செஸ்டர் நகருக்குப் பரவியதாக அறிவிக்கப்பட்டது.

கடந்த இரவு மன்செஸ்டரில் கடைகள், வீடுகள் பலவற்றுடன் கார்களும் தீவைக்கப்பட்டன என்றும் பல இடங்களிலும் பொலிசார் தாக்கப்பட்டனர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இக்கலவரங்களை தொலைக்காட்சியில் படம்பிடித்தவர்களையும் கலகக்காரர்கள் தாக்கி அவர்களது வாகனங்கள் தொலைக்காட்சி கமராக்களையும் சேதப்படுத்தியுள்ளார் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

#### அரசியல் அகதிகளாக ஜெர்மன்

# வரும் இலங்கை இளைஞர் மீது விசாரணை நடத்தவும்

### பொன் அரசிடம் செனட்டர் கோரிக்கை

பொன், ஜூலை 10

அரசியல் அகதிகள் என்ற பெயரில் மேற்கு ஜெர்மனுக்கு வரும் ஆயிரக்கணக்கான இலங்கை இளைஞர்களின் நிலை குறித்து உடனடியாக விசாரணை நடத்த வேண்டும் என்றும் விசாரணையின் பின்னரே நாட்டுக்குள் அனுமதிக்க வேண்டும் என்றும் மேற்கு ஜெர்மன் செனட்டர் திரு. ஹூமர் தமது அரசாங்கத்தைக் கேட்டுள்ளார்.

வெளிநாடுகளிலிருந்து அரசியல் தஞ்சம் கோரி ஜெர்மனுக்கு வருபவர்களில் இலங்கையர்களே பெருந்தொகையாக உள்ளார்கள் என்றும் தெரிவித்துள்ள அந்த செனட்டர் வெளிநாடுகளிலிருந்து இங்கு வருபவர்களை கட்டுப்படுத்துவதற்கு அவசிய சட்டங்களை இயற்ற வேண்டும் என்றும் அரசைக் கேட்டுக்கொண்டார்.

இதுவரையில் 2 ஆயிரத்துக்கு அதிகமான இளைஞர்கள் இலங்கையிலிருந்து கிழக்கு பேர்லின் சென்று அங்கிருந்து உல்லாசப் பிரயாணிகளுக்கான விசா பெற்றுக்கொண்டு மேற்கு ஜெர்மன் செல்கின்றனர் என்றும் மோசடிக் கும்பல் ஒன்றே இவர்களை ஜெர்மனுக்கு அழைத்துச் செல்கின்றது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

### மகேந்திரன் நீதிமன்றத்தில் ஆஜர்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திச்சபைத் தலைவர் செபமாலை மரியநாயகம் தாக்கப்பட்டு அவரது வீட்டிலிருந்து 48,500 ரூபா பெறுமதியான பொருட்கள் சேதப்படுத்தப்பட்டது தொடர்பாக முல்லைத்தீவு எம். பி. யின் மகன் சட்டத்தரணி மகேந்திரனும், மற்றும் இருவரும் முல்லைத்தீவு பொலிசாரால் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர்.

அரசியல் தகராறே இதற்குக் காரணமென்றும் தெரிவிக்கப்பட்டது.

சம்பவதினம் பிற்பகல் தாம் தமது மனைவியுடன் இருந்த போது சட்டத்தரணி செல்லத்தம்பு மகேந்திரன், சுமார் 15 பேருடன் ஆயுதங்கள் சகிதம் வந்து தன்னைத் தாக்கி உடமைகளை சேதப்படுத்தியதாக பொலிஸ் நிலையத்தில் திரு. மரியநாயகம் முறைப்பாடு செய்துள்ளார். (த)

### புதிய வாக்காளர் இடாப்புகள்

(புலோலி)

யாழ். மாவட்டத்தில் 1982 ம் ஆண்டிற்கான புதிய வாக்காளர் இடாப்புக்கள் தயாரிக்கப்பட்டுவருகின்றன.

இதனையடுத்து வடமராட்சி உதவி அரசாங்க அதிபர்கள் பிரிவுகளில் புதிய வாக்காளர் பதிவுபற்றிய விபரங்கள் திரட்டப்பட்டுவருகின்றன.

யாழ். உதவித் தேர்தல் ஆணையாளர் இது சம்பந்தமாக வடமராட்சி வடக்கு, கிழக்குப் பிரிவு, வடமராட்சி தெற்கு மேற்குப் பிரிவு உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்களில் பயிற்சி வகுப்புக்களை நடத்தினர். இப்பயிற்சி வகுப்புக்களில் சகல கிராமசேவை அலுவலர்களும் கலந்துகொண்டனர்.

### ஆசிரியரின்றி மாணவர் பாதிப்பு

(மட்டைதீவு)

மண்டைதீவு றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தில் கணித ஆசிரியர் இல்லையாதலால் மேற்படி பாடசாலையில் கற்கும் மாணவர்கள் கஷ்டமடைந்து வருவதாகப் பெற்றோர்கள் கவலை தெரிவிக்கின்றனர். (வ)

நல்லூர்

### மூத்தவிநாயகர் கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் ஸ்ரீ மூத்தவிநாயகர் கோவில் ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் இம்மாதம் 13ம் திகதி திங்கட்கிழமை காலை நடைபெறவுள்ளது. இன்று சனிக்கிழமை கிரியைகள் ஆரம்பமாகும்.

### ஆண்டு விழா

(உடுப்பிட்டி)

கரவெட்டி கிழக்கு மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் முதலாவது ஆண்டுவிழாவும் பொதுக்கூட்டமும் நேற்று மகளிர் சங்கத் தலைவி தலைமையில் நடைபெற்றது. பிரதம விருந்தினராக உதவி அரசாங்க அதிபர் திரு. சடாட்சர சண்முகநாதன் கலந்துகொண்டார்.

வெலிங்டன் (யாழ்நகர்)
10-30, 2-30 6-00, 9-30
ரஜனிகாந்த் - லதா
ஆயிரம் ஜென்மங்கள்

லிடோ யாழ். நகர்
10-30, 2-30, 6-00, 9-30
அழியாத கோலங்கள்
(வயது வந்தவர்களுக்கு மட்டும்)

இன்னும் சிலதினங்கள் மட்டும்.
தினசரி 4 காட்சிகள்
வின்சர் (யாழ்ப்பாணம்)
ஜெமினி, பத்மினி, ஜெயலலிதா, சுருளிராஜன், எஸ். வி. சுப்பையா
ஆதி பராசக்தி
(கலர்—புதிய பிரதி)
பாடசாலை மாணவர்களுக்கு விசேட சலுகை உண்டு

சாந்தி (யாழ் நகர்) 10-30, 2-30, 6-30, 9-45
இப்பொழுது
50-வது வெற்றித்தினமாக ஜனத்திரள் மத்தியில் காட்சியளிக்கிறது!
சிவாஜி, விஜயா, பாலாஜி, மேஜர், தேங்காய்
தர்மராஜா
யப்பானில் படமாக்கப்பட்ட கராட்டிச் சண்டைக்காட்சிகள் நிறைந்த வெள்ளிவிழா வண்ணச் சித்திரம்

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
கடைசி வாரம்
தினசரி 10-30, 2-00, 6-00 9-30
★ சிவாஜி ★ ஜெய்சங்கர் ★ ஸ்ரீதேவி
★ ஜெயசுதா ★ சுந்தரராஜன் ★மனோகர்ஜானகி
பட்டாக்கத்தி பைரவன்
(வண்ணப்படம்)

LAST FIVE DAYS
RAJAH Jaffna Daily 10-30, 2-00, 4-30 7-00 and 9-30
Dont Miss! Last Chance!
Meet Today!
THE BIG BOSS
(Scope and Color)
Adults only வயதுவந்தவர்களுக்கு மட்டும்
17-7-81 முதல்
எம்.ஜி.ஆர் - லதா
பல்லாண்டு வாழ்க

ராணி (யாழ்ப்பாணம்)
10-30, 2-15, 6-00, 9-30
எம். ஜி. ஆர். - ஜெயலலிதா
எங்கள் தங்கம்
(புத்தம்புதிய பிரதி — கலர்)
எமது அடுத்த வெளியீடு
பாக்கியராஜாவின்
சுவர் இல்லாத சித்திரங்கள்

வெல்லி (காங்கேசன்துறை)
தினசரி 6-15, 9-30
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி மாலினி பொன்சேகா
பைலட் பிரேம்நாத்

ஹரன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
சரத்பாபு, சுஜாதா, சரிதா
நூல்வேலி
(கலர்)

நாகம்ஸ் (சுன்னாகம்)
தினசரி 6-15, 9-30
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி-பிரமிளா
கவரிமான் (கலர்)

தமிழகத்தில் 100 நாட்களுக்கு மேல் ஓடிய வெள்ளிவிழா சித்திரம்
மனோகரா [யாழ்ப்பாணம்] தினசரி 4 காட்சிகள்
ஒரு கை ஓசை
(கலர்)
பாக்கியராஜின் கதை-வசனம்-டைரக்ஷனில்
உருவான வண்ணச் சித்திரம்
பாக்கியராஜ் ★ அஸ்வினி
★ சங்கிலிமுருகன்
மற்றும் பலர் நடித்தது
ஆசனங்களுக்கு முந்திக் கொள்ளுங்கள்


## பூநகரி பெண் கடத்தல் வழக்கு:

# "தேன்நிலவு சென்று திரும்பியவர் போல் 1-ம் எதிரி காணப்பட்டாரா?"

### டாக்டரிடம் சட்டத்தரணி கேள்வி

(யாழ்ப்பாணம்)

"1ம் எதிரியை நீங்கள் பரிசோதனை செய்தபோது அவர் தேன்நிலவுக்கு சென்று விட்டு திரும்பியவர் போல் காணப்பட்டாரா? என்று எதிரிகளின் சட்டத்தரணியின் கேள்வி யொன்றுக்கு டாக்டர் பதிலளிக்கையில் அவரிடம் காயங்கள் எதுவும் இருக்கவில்லை" என்று பூநகரி பெண்கடத்தல் வழக்கு விசாரணையில் கூறினார்.

இவ்வழக்கு யாழ். மேல் நீதிமன்றத்தில் நீதிபதி ஜனுப் எம். ஜாமில் முன்னிலையில் விசாரணைசெய்யப்பட்டது.

இவ்வழக்கில் பூநகரியில் 78 பெப்ரவரி 12ம் தேதி கனகசபை, சாந்தி ஆகியோர் 17 வயதான தேவியை கடத்தி சென்றதாகவும், 1ம் எதிரி கனகசபை தேவியை பலாத்காரம் செய்ததாக குற்றம்சாட்டப்பட்டிருந்தது

எதிரிகள் சார்பில் சட்டத்தரணி ஜிம்மி ராசரத்தினம், சட்டத்தரணி வை. சத்தியநாதன் உதவியுடன் ஆஜரானார். அரசதரப்பில் சட்டத்தரணி ஐ. ஞானநாதன் ஆஜரானார்.

**குறுக்கு விசாரணை**

டாக்டர் ஜெகநாதனை எதிரிகளின் சட்டத்தரணி ஜிம்மி ராசரத்தினம் குறுக்கு விசாரணை செய்தார்.

சட். தேவியை எங்குவைத்து பரிசோதனை செய்தார்? ஆஸ்பத்திரியில்

சட். வேறுயாசர் வந்தார்கள்?- ஞாபகமில்லை

சட். பொலிஸ் மேற்றன் வந்தாரா?- ஞாபகமில்லை

சட். சிலர் வந்திருந்தனர்?- ஆம்

சட். பலாத்காரம் செய்திருக்காவிட்டாலும், சாதாரணமாக நடந்து கொண்டிருந்தாலும் 4ம்காயம் ஏற்பட்டிருக்கும்?- ஆம்

சட். 1ம், 2ம், 3ம், காயங்கள் சிறுகாயம்?- ஆம்

சட். 3வது காயம் எங்கிருந்தது?- முழங்காலுக்குக்

சட். எவ்விடத்தில்?- முழங்காலுக்கு கீழ் பின்பகுதியில்

சட். காயம்பற்றி உங்கள் குறிப்பில் எதுவும் குறிப்பிடவில்லை?- ஆம்

சட். 78ம் ஆண்டு பெப்ரவரி மாதம் பரிசோதனை செய்தீர்?- ஆம்

சட். 3 வருடத்தின் பின் இன்று சாட்சியமளிக்கிறீர்?- ஆம்

சட். உமது ஞாபகசக்தியில் இருந்துதான் கூறுகிறீர்?- ஆம்

சட். முழுக்க முழுக்க ஞாபகத்தின் மூலம் கூறுகிறீர்?- கூறமுடியும்

சட். குறிப்பு இல்லாமல் 78ல் நடந்ததை ஞாபகசக்தியால் கூறமுடியுமா?- ஆம்

சட். நீங்கள் இதுவரை எத்தனை பலாத்கார சம்பவங்களை பரிசோதனை செய்திருக்கிறீர்கள்?- 15 அல்லது 20

சட். 78ம் ஆண்டுக்குபின் எத்தனை?- 3 சம்பவங்கள்

**காரணம் கூறமுடியுமா?**

சட். முழங்காலின் பின்பக்கம் என்று குறிப்பில் எழுதாததற்கு ஏதும் காரணம் காட்ட முடியுமா?- மற்றொருவரை பரிசோதனை செய்யவிருந்தேன் அவசரத்தால் எழுதாமல் விட்டிருக்கலாம்

சட். மற்றவர் யார்?- 1ம் எதிரியையும் அன்றிரவு பரிசோதனை செய்தேன்

சட். குறிப்பு எழுத மறந்திருக்கலாம்?- ஆம்

சட். தேவியை எத்தனை மணிக்கு பரிசோதனை செய்தீர்?- இரவு 8 30 மணிக்கு

சட். எத்தனை மணிக்கு கடமை முடியும்?- 5 மணிக்கு அவசர தேவையானால் அதன் பின்பும் சிகிச்சையளிப்பேன்

சட். ஆஸ்பத்திரிக்கு அருகில் உங்கள் வீடு இருக்கிறது?- ஆம்

சட். அன்று இரவு சாப்பிட்டபின் ஓய்வு எடுத்துக் கொண்டிருப்பீர்கள்?- அதை என்னால் கூறமுடியாது. எனக்கு வீட்டிற்கு தகவல் வந்தது. நான் போய் பரிசோதனை செய்தேன்.

**பின்பக்கத்தையும் சொல்லலாம்**

சட்: முழங்காலுக்கு கீழ் என்று மட்டும் குறிப்பு எழுதியிருக்கிறீர்? - ஆம் பின்பக்கத்தில்

சட்: முழங்காலுக்கு கீழ் என்றால் முன்பக்கமல்லவா? இல்லை பின்பக்கத்தையும் சொல்லலாம்.

சட்: முழங்கால் எங்கிருக்கிறது? - முன்னுக்கு

சட்: அதன் கீழ் என்றால் அதுவும் முன்னுக்குத்தானே - இல்லை அதுபின்னுக்கு.

சட்; முழங்காலுக்கு கீழ் என்றால் அதன் கருத்து என்ன? பின்பக்கத்தில் என்பது.

டாக்டர் ஜெகநாதன் சாட்சியமளிக்கையில் மேலும் கூறியதாவது தேவி என்னிடம் 1-ம், 2-ம் எதிரிகள் கடத்தி சென்றதாகவும் தன்னை 10 நாட்கள் வைத்திருந்ததாகவும் 1-ம் எதிரி பலாத்காரம் செய்ததாகவும் தெரிவித்தார்.

இதன்பின் இரவு 9 மணிக்கு 1-ம் எதிரியை பரிசோதனை செய்தேன். அவரது உடலில் எவ்விதகாயமும் காணப்படவில்லை.

குறுக்கு விசாரணையின் போது டாக்டர் மேலும் கூறியதாவது தொடைக்கு பின்பக்கத்தில் ஒரு காயம் ஏற்பட்டிருந்தால் அதைதொடைப் பின்பக்கத்தில் என்று கூறலாம் முழங்காலுக்கு கீழ் என்றால் சாதாரண மக்கள் முன்பக்கத்தை காட்டுவார்கள் ஆனால் வைத்திய துறையைப் பொறுத்தவரை பின்பக்கத்தையும் கூறலாம் முழங்கால் மூட்டு இருக்கிறது. அதன் கீழுள்ள 4 பக்கமும் முழங்காலுக்கு கீழ் பகுதிகள் தான்.

சட்: முதுகில் காயம் இல்லை?- கழுத்தில் மேலெழுந்த காயம் இருந்தது.

சட்; உரஞ்சல் காயம் அளவு குறிப்பிடவில்லை? - இல்லை.

சட்: உரஞ்சல் காயம் பரந்து இருந்ததாக குறிப்பிடவில்லை? - இல்லை.

சட்: நீளமான உரஞ்சல் காயம் எப்படி ஏற்படும்? சொறிஞ்சால் ஏற்படும்.

சட்: சொறிஞ்சல் கதை இங்கு பேச வரவில்லை 1 வேறு விதமாகவும் ஏற்படலாம்.

நீதிபதி; நீங்கள் கேட்ட கேள்விக்கு டாக்டர் பதில் கூறியுள்ளார்.

சட்: வேறு எவ்விதம் ஏற்படும்? - நிலத்தில் விழுந்தால் ஏற்படும்,

சட்; 4-வது காயம் பலாத்காரம் பாவிக்கா விட்டாலும் சாதாரணமான நிலையிலும் ஏற்பட்டிருக்கும்? - ஆம்.

சட்: வாயில் எவ்வித காயமும் இருக்கவில்லை? - இல்லை,

சட்: 5 தடவை பலாத்காரம் செய்யப்பட்டிருக்கிறது. - ஆம்.

சட்: 5 தடவையும் காட்டுக்குள் இருந்தார்களா? - நான் அதை கேட்கவில்லை.

சட்; 1-ம் எதிரி தேவியின் சம்மதத்துடன் தான் அவரை கூட்டிச் சென்றதாக சொன்னாரா? - ஆம்.

சட்: கணவன் மனைவியாக

(2-ம் பக்கம் பார்க்க)

# "நான்கு காயங்களை நான் அவதானித்தேன்"

### டாக்டர் சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

தேவியின் உடலில் பல காயங்களை அவதானித்தேன். உடலில் உரசல் காயங்களும் மேலெழுந்த ஆழமல்லாத காயங்களும் இருந்தன.

பூநகரி பலாத்கார வழக்கில் சாட்சியமளித்த டாக்டர் எஸ். ஜெகநாதன் மேற்கண்டவாறு கூறினார்.

டாக்டர் ஜெகநாதன் மேலும் கூறியதாவது:

தேவியை 78 பெப்ரவரி 21ம் தேதி இரவு 8. 30 மணிக்கு பரிசோதனை செய்தேன். அவரின் உடலில் பல காயங்களை அவதானித்தேன். உடலில் உரஞ்சல் காயங்களும், ஆழமல்லாத மேலெழுந்த கீறல் காயமும் இருந்தன இரண்டு முழங்காலிலும் உரஞ்சல் காயம் இருந்தது. பிடரியிலும் காயமிருந்தது. புதிதாக ஏற்பட்ட காயமாகக்காணப்பட்டது.

அவர் பொது சுகாதாரத்திற்கு ஏற்ற உடற்கட்டு உள்ளவராக இருந்தார். ஒரு ஆளை எதிர்க்கும் அளவு தைரியம் அவரிடம் இருக்கவில்லை. பத்து நாட்களுக்குட்பட்ட காயங்கள் காணப்பட்டது

"எல்லாமாக 4 காயங்கள் காணப்பட்டது. 3 காயங்கள் முள்ளு கீறியதால் ஏற்பட்டிருக்கலாம் கைநகக் கீறலாலும் ஏற்பட்டிருக்கலாம்.

1ம் எதிரியையும் அன்றிரவு 9 மணிக்கு பரிசோதனை செய்தேன்: அவரது உடலில் எவ்வித காயமும் காணப்படவில்லை."

(—)

## குறைந்த விலையில் எண்ணெ விநியோகம் எந்த ஒரு அரசியல் கட்சியுடனும் ஈராக் ஒப்பந்தம் செய்யவில்லை

### அனுராவின் கூற்றுக்கு ஈராக் தூதரகம் மறுப்பு

(கொழும்பு)

இலங்கைக்கு குறைந்த விலையில் எண்ணெ விநியோகம் செய்வது குறித்து இலங்கையில் உள்ள எந்த ஒரு அரசியல் கட்சியுடனும் ஈராக் ஒப்பந்தம் எதையும் செய்துகொள்ளவில்லை என்று இலங்கையில் உள்ள ஈராக் தூதரகம் அறிவித்துள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி பதவிக்கு வந்தால் ஈராக் இலங்கைக்கு தற்போதைய விலையிலும் பார்க்க 50வீதம் குறைந்து எண்ணெ வழங்கும் என மஸ்கெலியா-நுவரெலியா எம். பி. திரு. அனுரா பண்டார நாயக்கா அண்மையில் கூட்டமொன்றில் உரைநிகழ்த்துகையில் கூறியிருப்பதாக இது குறித்து அரசாங்கம் ஈராக் தூதரகத்திடம் விளக்கம் கோரியிருந்ததை அடுத்தே ஈராக் தூதரகம் மேற்கண்ட விளக்கத்தை நேற்று அளித்துள்ளது.

அனுராவின் கூற்றுக் குறித்து அரசு விசாரணை நடத்தும் என்று அண்மையில் பாராளுமன்றத்திலும் பிரதமர் தெரிவித்திருந்தார்.

இவ்விவகாரம் குறித்து கொழும்பிலுள்ள ஈராக் தூதரகம் நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள அறிக்கையில் ஈராக் இலங்கை அரசுக்கு மட்டும் எண்ணெ வழங்குமே ஒழிய தனிப்பட்டவர்களுக்கோ விநியோகம் செய்யமாட்டாது அன்றி கட்சிக்கோ எண்ணெ என்றும் தெரிவித்துள்ளது. [இ]

## இந்திராவை 'அமிர்' ஏன் சந்திக்கவில்லை

[யாழ்ப்பாணம்]

''அவசரமாக இலங்கை திரும்ப வேண்டியிருந்ததால் புதுடில்லிக்கு சென்று பாரதப் பிரதமர் இந்திரா காந்தியை சந்தித்துப் பேசமுடியவில்லை''.

வெளிநாடு விஜயத்தின் பின்னர் திரும்பிய எதிர்க்கட்சித்தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் பத்திரிகையாளருக்கு அளித்த தகவலில் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது; ''அமெரிக்கா, லண்டன், ஜெர்மனியில் பல தமிழ் இளைஞர்கள் இயக்கங்கள் இருக்கின்றன. அவற்றையெல்லாம் சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. இயக்கங்கள் யாவற்றையும் கட்டுக்கோப்பில் இயங்க செய்யவும் எமது இயக்கத்திற்கு அதன்மூலம் பலன் கிடைக்க செய்யவும் வாய்ப்பு கிடைத்தது என்று திரு. அமிர்தலிங்கம் தெரிவித்தார். [க]

## தந்தை செல்வா நினைவுச் சொற்பொழிவு

[யாழ்ப்பாணம்]

தந்தை செல்வாவின் நினைவு தினச்சொற்பொழிவு இன்று சனிக்கிழமை மாலை யாழ். வீரசிங்கமண்டபத்தில் நடைபெறவிருக்கிறது. இவ்வைபவத்திற்கு தந்தை செல்வா அறங்காவல் குழுத்தலைவர் திரு. கு. நேசையா தலைமை தாங்குவார்'

நினைவு தினச் சொற்பொழிவை கனடா, நியூபிறுன்ஸ்விக் பல்கலைக்கழக அரசியல் பீடத்தலைவர் திரு. ஏ. ஜே. வில்சன் நிகழ்த்துவார்.

இவ்வைபவத்தில் 1980ம் ஆண்டு வண. பிதா தனிநாயகம் அடிகளாரின் தந்தை செல்வா நினைவுச் சொற்பொழிவு நூலை எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் வெளியிட்டுவைப்பார். யாழ். மாவட்ட அபிவிருத்தி சபைத்தலைவர் திரு. எஸ். நடராசா நன்றியுரை வழங்குவார். [மா]

## நயினையில் இன்று மஞ்சம் வெள்ளோட்டம்

[வேலணை]

நயினாதீவு நாக பூசணி அம்பாள் ஆலயத்தில் இன்று காலை 10 மணிக்கு மஞ்சம் வெள்ளோட்டவிழா நடைபெறுகிறது.

சுமார் இரண்டரை லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட இம்மஞ்சத் திருவிழா நாளை இரவு நடைபெறுகிறது.

ஆலய உற்சவங்களின் பாதுகாப்பு நடவடிக்கைகளை இன்ஸ்பெக்டர் திரு. சிறிதரன் தலைமையிலான பொலிஸ் கோஷ்டி மேற்கொண்டு வருகிறது.

இம்மாதம் 17, 18, 19, 29ம் திகதிகளில் முறையே சப்பறம், ரதோற்சவம், தீர்த்தோற்சவம், தெப்பத்திருவிழா ஆகியன இடம்பெறும்.

## லக்ஸ்பிறே 14-50

[கொழும்பு]

ஒரு றுத்தல் 'லக்ஸ்பிறே' பால் மாவின் விலை 15 ரூபாவிலிருந்து 14 ரூபா 50 சதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

ஒருறுத்தல் 'லக்ஸ்பிறே'யை ரூ. 14-50க்கு அல்லது அதற்கு குறைந்த விலையில் விற்குமாறு கூட்டுறவு மொத்த விற்பனவு நிலையம் பணித்துள்ளது.

ரூ. 12-50 ஆக இருந்த 'லக்ஸ்பிறே'யின் விலையைப் 15 ரூபாவாக அதிகரிப்பதென முடிவு செய்த பின்னர் அதன் விலையைக் குறைப்பது பற்றி ஆலோசிப்பது என்று அமைச்சரவை கடந்த புதனன்று முடிவு செய்தது தெரிந்ததே.

## யாழ். வன்செயல்கள் மட்டுநகரில் இன்று வழிபாடு

[மண்முனை]

யாழ். நகரில் நடைபெற்ற வன்செயல்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியும், நிவாரணமும் கோரியும்-

பாதிக்கப்பட்டவர்களுக்கு அனுதாபம் தெரிவித்தும்-

உயிர் இழந்தவர்களின் ஆன்மசாந்திக்காகவும்-

சர்வதேச விசாரணைக்குழு ஒன்றை விசாரணை செய்யக் கோரியும்-

அடக்கி ஒடுக்கப்படும் இளங்களுக்கு விடுதலை வேண்டியும்-

மட்டக்களப்பு புனித ஜேசு திருச்சபையினால் இச்சபையைச் சேர்ந்த அருட்திரு வண. யோசப் மேரி அடிகளாரால் புளியடித்தீவு தேவமாதா தேவாலயத்தில் இன்று திருப்பலி வழிபாடுகள் நடாத்தப்படும்.

இதனைத்தொடர்ந்து தேவாலய முன்றலில் அருட்திரு வண. மேரி அடிகளார் தலைமையில் நடைபெறும் அனுதாபக் கூட்டத்தில் இந்து, கிறிஸ்தவ, பௌத்தமதத்தலைவர்கள் உட்பட நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கம், காந்தீய இயக்கம், மட்டக்களப்புசைவ இளைஞர் மன்றம், தமிழர் ஆசிரியர் சங்கம், தமிழ் இளைஞர் பேரவை, தமிழ் மகளிர் பேரவை, தமிழர் விடுதலைக் கூட்டணி மற்றும் மனித உரிமைகளை மதிக்கும் இயக்கங்கள் ஆகிய பல்வேறுபட்ட இயக்கங்கள் கலந்து கொள்ளவிருக்கின்றன. [இ]


# சிங்கப்பூரில் வேலை வாய்ப்பு

(FACTORY HELPERS FOR SINGAPORE)

ஆண்கள்

ஆங்கிலம் கொஞ்சம் பேசக்கூடியவர்களுக்கு சிங்கப்பூரில் வேலைவாய்ப்பு

வயது எல்லை 18—35

பாஸ்போட்டுடன் நேரில் வரவும்.

சாகிப் ட்றேட் சென்டர்

[Sahib Trade Centre]

148, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.

HAKEEM TRADES

63, Dam Street, Colombo--12

L/No. 363

[0274]


## இப்படியும் நடக்கிறது

மத்திய கிழக்கில் வேலைபெற்றுத் தருவதாகக்கூறிய 'ஏஜன்ஸி'களினால் உறிஞ்சப்பட்ட வடபகுதி இளைஞர்கள் சில 'ட்ரவல் ஏஜன்ஸி'களினால் இப்பொழுது ஏய்க்கப்படுகின்றனர்!

சந்திரனில் திரு. ஆம்ஸ்ட்ரோங் காலடி வைத்த மாதிரி பேர்லினில் எப்படியும் இறங்கிவிடவேண்டுமென்ற ஆவலில் இரவுபகலாக நாயாக அலைந்து, ஓடாகித் தேய்ந்து, 'ட்ரவல் ஏஜன்ஸி'களிடம் கஃளகஃளயாகப் பணத்தைக்கொட்டி, டிக்கட் பெற்று, பிரயாணத்துக்கான திகதியையும் பதிந்து கட்டுநாயக்கா விமானநிலையத்திற்குள் நுழையும்போதுதான் ...

புறப்படுவதற்கான திகதி விமான டிக்கட்டில் 'ஓ. கே' செய்யப்படாத மர்மம் வெளியாகி தமிழ் இளைஞர்களின் முழி பிதுங்குகிறது!

பிறகு என்ன?

அந்த 'ட்ரவல் ஏஜன்ஸி'களைத் தேடிக் கண்டுபிடிப்பதே...பேர்லினுக்குச் சென்று திருப்பிவிடப்பட்ட மாதிரிதான்!

°° °°

யாழ். நகரில் பளிச்சென்று காணப்படும் ஒரு ''டியூஷன் கிளாஸ்'' சுவரொட்டி இப்படிக் கூறியது—

''Spoken English with Grammer வகுப்புகள்.. ஆரம்பமாகின்றன.''

சுவரொட்டியில் காணப்படும் 'க்கிறமர்' என்ற (இலக்கணம்' வார்த்தையிலேயே படுகொலை! Grammar என்பதற்குப் பதிலாக Grammer என்று அச்சாகியுள்ளது. அதிகம் படித்த இந்த 'ஆசிரியர்'களிடமிருந்து அப்பாவி மாணவர்களை ஆண்டவன்தான் காப்பாற்றவேண்டும்!

— ஊடுருவி

## யாழ். நகைக்கடை

[1ம் பக்கத் தொடர்ச்சி)

கைப்பற்றப்பட்டுள்ளது.

பன்னாலைக்கட்டுவனிலுள்ள ஈவினையில் வசிக்கும் ஞானம்மா செல்லத்துரை [65 வயது] என்ற வயோதிப மாது தனது வீட்டுக்குச் செல்லும் வழியில் அவரைத்தாக்கிவிட்டு 20 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்கச் சங்கிலியை அதே இடத்தைச் சேர்ந்த சீனியர் கந்தசாமி என்பவர் அறுத்துக் கொண்டு ஓடியதாக சுன்னாகம் பொலீஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதைத் தொடர்ந்து சுன்னாகம் உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. சிவராசாவும், சார்ஜன்ட் திரு. பொன். பரமானந்தராசாவும் சந்தேகத்தின் மீது சீனியர் கந்தசாமி என்பவரைக் கைது செய்து விசாரணைகள் மேற்கொண்டதைத் தொடர்ந்து சங்கிலியின் ஒருபகுதி அவரது மனைவியிடமிருந்து மீட்கப்பட்டது.

சங்கிலியின் மீதிப்பகுதியை மீட்பது தொடர்பாக சந்தேக நபர்கள் சிலர் பொலிசாரினால் தேடப்பட்டு வந்தனர்.

விசாரணைக் குட்படுத்தப்பட்ட கந்தசாமி என்பவர் மல்லாகம் நீதவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டு இம்மாதம் 14ம் திகதி வரை றிமாண்டில் வைக்கப்பட்டவர்.

சுன்னாகம் பொலீஸ் நிலைய பொறுப்பதிகாரி தலைமையில் சென்ற பொலிஸ் கோஷ்டியினர் உரும்பிராயில் வைத்து இ. பவளகாந்தன் என்பவரைக் கைது செய்து விசாரணைகள் மேற்கொண்டபோது, கொள்ளையடிக்கப்பட்ட சங்கிலியின் ஒருதுண்டை தன்னுடம் கந்தசாமி என்பவர் விற்கும்படி கொடுத்ததாகவும்' யாழ்ப்பாணத்திலுள்ள நகைக்கடை ஒன்றில் ஒரு பகுதியை 2550 ரூபாவிற்கு விற்றதாகவும் சொன்னாராம். சங்கிலியின் மிகுதியாக உள்ள பகுதியை மீட்பதற்கு சுன்னாகம் பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். [மா]

## விசாரணை நடுவில் எதிரிகள் விடுதலை

[யாழ்ப்பாணம்]

பூநகரி பெண்கடத்தல் வழக்கில் விசாரணை நடுவில் நேற்று எதிரிகள் விடுதலை செய்யப்பட்டனர்.

இவ்வழக்கு யாழ். மேல்நீதிமன்றத்தில் நீதிபதி ஜனைப் எம் ஜாமில் முன்னிலையில் நடைபெற்றது.

ஜூரிசபையினர் விசாரணையைதொடர விரும்பவில்லை என்று ஏகமனதாக தெரிவித்ததைத்தொடர்ந்து நீதிபதி எதிரிகளை விடுதலை செய்தார். [க]

## பட்டிருப்பு ..

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

துடன் இராணுவத்தினர் ரோந்து நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். வன்செயல் சம்பவங்கள் குறித்த நேற்று அம்பாறை கச்சேரியில் மாநாடு நடைபெற்றது.

எல்லைக் கிராமங்களில் நடைபெற்ற வன்செயல்கள் குறித்து பட்டிருப்பு எம்.பி. திரு. பூ. கணேசலிங்கம் நேற்று முன்தினம் ஜனாதிபதி திரு ஜே. ஆர். ஜயவர்த்தனாவிடம் நேரில் எடுத்துக்கூறி பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்யுமாறு கேட்டுக் கொண்டுள்ளார். (து)

## நம்பிக்கையில்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

பட்சத்தில், கூட்டணி எம்.பி.க்கள் எல்லோரும் கலந்து கொண்டு தனிப்பட்ட விளக்கம் அளித்துவிட்டு வெளியேறுவதென்றும் நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதத்தில் கலந்து கொள்வதில்லையென்றும் முடிவு செய்யப்பட்டது.

தனிப்பட்ட விளக்கம் அளிக்க, சபாநாயகர் அனுமதியளிக்காத பட்சத்திலும் நம்பிக்கையில்லாப் பிரேரணை விவாதத்தில் கலந்து கொள்வதில்லையென்றும் முடிவு செய்யப்பட்டது. [ம-க]

## பிணையில் அனுமதி

[யாழ்ப்பாணம்]

மன்கும்பானில் தீங்குவிளைவிக்கும் ஆயுதங்களின் ஒரு தொகுதியான கெற்புகள் செருகப்பட்ட வெடிபொருள் குச்சிகளை 1973ம் ஆண்டு தை மாதம் 15ம் திகதி வைத்திருந்ததாக குற்றம் சாட்டப்பட்டு 3 இளைஞர்களுக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கு யாழ். மேல் நீதிமன்றத்தில் விசாரணைக் கெடுக்கப்பட்டபோது 3ம் எதிரி திசவீரசிங்கம் ஆஜராகவில்லை. இவரது பிணையாளருக்கு நோட்டீஸ் பிறப்பித்த மேல் நீதிமன்ற நீதிபதி எம். ஜமீல் ஏனைய இரு எதிரிகளான ஞானசேகரன், தாசன் ஆகிய இருவரையும் தலா 5 ஆயிரம் ரூபா பிணையில் செல்ல அனுமதித்தார்.

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட்டுக்காக யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதி 808ப இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 1981ம் ஆண்டு ஜூலை மாதம் 11-ம் திகதி அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது. Regd No. QB 100286/81. P. O. Box 49. Jaffna. தந்தி தொலைபேசி: 7707 Registered as a News Paper at the General Post Office Sri Lanka